ISSN : 2456-821X

புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
Peer-Reviewed

UGC CARE LIST

UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India

Volume : 07, Issue : 01/04 - March 2023

==============================================================================

# சிலப்பதிகாரப் பாடல்களுக்கு முழங்கிய குடமுழா தமிழ் இசை

==============================================================================

**கட்டுரையாளர்**
***முனைவர். சு.நாகரத்தினம்,***
*முதன்மை ஆய்வாளர்,*
*செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் சிலப்பு இசை அலைபேசிச் செயலி உருவாக்கத் திட்டம்,*
*பேராசிரியர் மற்றும் தலைவர்,*
*தொடர்பியல் துறை,*
*மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை – 625 021*

==============================================================================

*தமிழர்களின் வாழ்வு இசையுடன் இணைந்து இருந்தது. தமிழ் நிலம் ஐவகை நிலங்களாக – குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் மற்றும் பாலை என பகுக்கப்பட்டு, ஒவ்வொரு திணைக்கும் ஒரு யாழ் இசைக்கருவியும் ஒரு பண்ணும் ஓங்க சிறப்பான வாழ்க்கையினை தமிழர்கள் வாழ்ந்துள்ளனர். மருத நிலத்துக்கு உரிய இசைக்கருவியாக குடமுழா இருந்துள்ளது[1]. இதனை எடுத்தியம்பும் வகையில் தமிழர்களின் இசைக்கருவூலமாக உள்ளது சிலப்பதிகாரம். ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரம் இசை இலக்கணங்களைக் கொண்டு, இன்றளவிலும் வியந்து பார்க்கும் ஒரு தனிச்சிறப்பானப் பெட்டகமாகத் திகழ்கிறது.*

*மத்தளம், இடக்கை, சல்லிகை, கரடிகை, படகம் ஆகிய கருவிகளுடன் குடமுழா அகமுழவுக் கருவியாக விளங்குவதாக சிலப்பதிகாரத்துக்கு உரை எழுதிய அடியார்க்கு நல்லார் குறிப்பிடுகிறார்[2]. சிலப்பதிகாரத்தின் அரங்கேற்றுகாதையில் ஆமந்திரிகை என்று அழைக்கப்படும் இடக்கை, யாழ் கருவிகளுடன் மத்தளம் மற்றும் குடமுழாக் கருவிகள் இசைக்கப்பட்டிருக்கின்றன. ஐம்முகம் கொண்ட முழவுக்கருவி தற்போது திருவாரூர் கோயில் தவிர, பொதுப்புழக்கத்தில் வேறு எங்கும் காணலாகவில்லை. எனினும், ஒரு முக முழவு, கேரளத்தில் பல்வேறு இடங்களில் இசைக்கப்படுகிறது. மண்பானைக் குடத்தில்*

*வாசிக்கப்படும் கடம், வில்லுப்பாட்டில் வில்லில் இணைக்கப்பட்டிருக்கும் குடம் எழுப்பும் ஒலிகளை விட இன்னிசை வழங்கியவை குடமுழாக்கள்.*

*முழவு என்ற கருவி முழவக்கருவிகளுக்கு அனைத்தும் பொருந்தக் கூடிய பொதுவான சொல். ஆனால் சங்க இலக்கியங்கள் குடமுழாவை குறிப்பிடும் போது, குடமுழா என்று குறிப்பிடாமல் முழவு என்ற பெயரால் குறிப்பிடுகின்றன. ஆனால் அதன் உருவம் மற்றும் அமைப்பு பற்றி குறிப்பிடுவதை வைத்தே நாம் அவ்விலக்கியங்கள் குறிப்பிடுவது குடமுழா என்று அறிகிறோம்.*

*"நிலவு கானல் முழவு தாழை*
*குளிர்ப் பொதும்பர், நளித் தூவல்" – மது. 115*

*நிலாவைப் போல மணலையும், குடமுழா போல் காய்களுடைய தாழையுடைய கரையைக் கொண்ட எனக் கூறி ஒப்புமையிடப்பட்டன. ஆக தாழை மரத்தின் காய்களும் பழங்களும் குடமுழாவுக்கு ஒப்புமையிடப்பட்டதிலிருந்து முழவு என்ற சொல் குடமுழாவைக் குறிப்பிட்டதை அறியலாம்.*

*அரங்கேற்று காதையில் கருவிகளுடன் சேர்ந்திசைத்த குடமுழாவைத் தற்போது, பாடல்களுக்குப் பயன்படுத்த முடியுமா என்பது குறித்து இந்த ஆய்வுக் கட்டுரை செயல்முறை அனுபவங்களைப் பகிர்ந்து கொள்கிறது.*

*தமிழகத்தில் ஐம்முக முழவுக் கருவியான குடமுழா, திருவாரூர் கோயிலில் இன்றும் இசைக்கப்படுகிறது. இக்கருவி தவிர, தமிழகத்தில் குடமுழாக் கருவி பொது வழக்கத்திலிருந்து மறைந்துவிட்டது. ஆனால், கேரளாவில், கூத்து மற்றும் கூடியாட்டம் ஆகியற்றில் தற்போது முக்கிய இசைக்கருவியாக குடமுழா இடம்பெற்றுள்ளது.*

***குடமுழாவின் அமைப்பு***

*பானையின் ஒரு முகத்தில் தோல் போர்த்தப்பட்டு இசைக்கப்பட்ட கருவி குடமுழா. பின்னாளில் இருமுக, மும்முக மற்றும் நான்குமுக முழவமாகவும் அதன்பின்னர் ஐம்முக முழவமாகவும் ஏழுமுக முழவமாகவும் வளர்ச்சி அடைந்தது. எனினும் ஒரு முகம் மற்றும் ஐம்முகக் கருவிகள் புகழ் பெற்று விளங்குகின்றன. தொடக்க காலத்தில் இக்கருவி மண்பானையால் ஆனதாக இருந்தது. பின்னர் அது உலோகத்தால் செய்யப்பட்டது.*

*திருவாரூரில் உள்ள முழவக்கருவியில் மான்தோல் போர்த்தப்பட்டுள்ளது. ஆனால் மற்ற கருவிகளில் அவ்வாறில்லை. ஆக, மான்தோல் தாளம் கோயிலுக்குரியதானதாக மட்டும் மாறியிருக்க வேண்டும். பொதுவெளியில் இருந்த முழவங்கள் மாட்டின் தோல்களாவும் இருந்திருக்கலாம். ஆக, பொதுப் பயன்பாட்டிலிருந்து ஐம்முக முழவம் தனித்துக் கொண்டு செல்லப்பட்டிருக்கலாம். குடமுழா மற்ற முழவக் கருவிகளைப் போல் அறிவிப்புக்கானதல்ல. அது அரங்கேற்றக் கருவியாகத் திகழ்ந்திருக்கிறது. நிகழ்ச்சிகளுக்கும் ஆடலுக்கும் துணை சேர்க்கும் இசையை வழங்கியிருக்கிறது.*

**இலக்கியங்களில் குடமுழா**

*குழலுக்கும் யாழுக்கும் சங்குக்கும் உள்ள வரலாறு போல், தமிழ் நிலத்தில் குடமுழா இயல்பாகத் தோன்றியிருக்கும் சாத்தியக்கூறுகள் அதிகம். பறைக்குத் தோல் போர்த்தியவர்கள், தாங்கள் பயன்படுத்திய குடங்களின் முகங்களுக்கும் தோல் போர்த்தி பயன்படுத்தியிருக்கும் இயற்கையான வாய்ப்பினை இசையறிஞர்கள் யாரும் மறுக்கலாகாது.*

*சிலப்பதிகார காலம் கி.பி., இரண்டாம் நூற்றாண்டாகக் கொண்டாலும் அதற்கு முன்பே நல்லதொரு தொடர்ச்சியான வழக்கத்தில் இல்லாமல் குடமுழா அரங்கத்தில் ஏறியிருந்திருக்க முடியாது. எனினும் அப்போது குடமுழா என்ற பெயரால் வழங்காவிட்டாலும், முழா, முழவு என்ற சொற்றொடர்களும் குடமுழாவைக் குறித்தே இருந்தன.*

*முழா அரைப் போந்தை பொருந்தி நின்று*
*யான்கண் டனன் அவன் ஆடா குதலே. (புறம். 85: 375)*

*புறநானூற்றில் இப்பாடல் பனையின் அடிமரத்தைக் குறிப்பிடுகிறது. இங்குள்ள முழா அரைவட்ட வடிவமான முரசினை ஒப்பிடுவதைக் காட்டிலும் அது கீழே பருத்தும் மேலே குறுகியும் இருக்கும் பானை போன்ற அமைப்பினைப் பார்க்கும் பார்க்கும் போது குடம் போன்று தெரிவதால், இங்குள்ள முழா குடமுழாவையே ஒப்பிட்டு எழுதப்பட்டிருக்கலாம். பறை இசைக்கருவியாகட்டும் அல்லது முழவு இசைக்கருவியாகட்டும் அவற்றினோடு குடமுழாவும் இணைந்தே வளர்ந்திருக்க வேண்டும். இந்தியாவின் பல்வேறு இடங்களில் கி.பி., 4 ஆம் நூற்றாண்டு முதலான சிற்பங்களில் குடமுழா காணப்படுகின்றன. தமிழகத்தில் கிடைத்துள்ள சிற்பங்களில் கி.பி., 7 ஆம் நூற்றாண்டில் பல்லவர்கள் 8 ஆம் நூற்றாண்டில் பாண்டியர்கள் மற்றும் 11-12 ஆம் நூற்றாண்டுகளில் சோழர்களின் சிற்பங்கள் குடமுழா உருவங்களைக் கொண்டுள்ளன (குடவாயில் பாலசுப்ரமணியம், 1997). வைத்தீசுவரன் கோயிலில் 13 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த வெண்கல உருவம் உள்ளது. அதில் இரு ரிஷிகள் உள்ளனர். அதில் ஒருவருக்கு நான்கு கரங்கள் உள்ளன. அவர் ஐம்முக முழவுக் கருவியை இசைப்பது போல் உள்ளது. அதுதான் குடமுழா[3]. செப்புப்படிமங்களிலும் கி.பி., 11 -17 ஆம் நூற்றாண்டுகளில் குடமுழா இடம்பெற்றுள்ளன. கி.பி., 10 ஆம் நூற்றாண்டுக்குப் பின் ஓவியங்களிலும் குடமுழாக்கள் இடம்பெற்றுள்ளன. சிலப்பதிகாரத்தில் குடமுழா, ஆடல் அரங்கக் கருவியாகச் சித்தரிக்கப்படுகிறது. இக்கருவி பழங்காலத்தில் தமிழர்களின் மக்கள் கருவியாக இருந்ததிருக்கிறது. மங்கல விழாக்களிலும், இசை நிகழ்ச்சிகளிலும் மற்றும் ஆடல் அரங்குகளிலும் இக்கருவி இன்னிசை வழங்கியிருக்கிறது. அந்நிலை இப்போது இல்லை.*

*குழல்வழி நின்ற தியாழே யாழ்வழித்*
*தண்ணுமை நின்றது தகவே தண்ணுமைப்*
*பின்வழி நின்றது முழவே முழவோடு*

*கூடிநின் றிசைத்த தாமந் திரிகை (சிலப். 1: 140-144)*

*தண்ணுமை பின்வழி நின்றது முழவேயென்றது என்பதற்கு மத்தளக் கருவிவழியே குடமுழவு நின்றதென்றவாறு என்று உரை எழுதியிருக்கிறார் அடியார்க்கு நல்லார்[2]. சிலப்பதிகார காலத்தில் குடமுழவு என்ற சொல் இருந்திருக்காவிட்டாலும் அது முழவு என்ற பொதுப் பெயரால் அழைக்கப்பட்டிருக்கிறது. மேளக்கருவிகளில் அது இணைந்து இசைத்தையும் இச்சிலப்பதிகார வரிகள் வழியாக நாம் அறியலாம்.*

*சிலப்பதிகாரத்தில் 'குயிலுவ கருவிகள்' என்ற வரிகளுக்கு உரை எழுதிய அடியார்க்கு நல்லார், 31 கருவிகளைக் குறிப்பிடுகிறார். அவற்றில் குடமுழாவும் ஒன்று. தாழ் குரற் றண்ணுமையென்றது – தாழ்ந்த குரலினுடைய தண்ணுமைக் கருவி முதலாயின வாசித்தலுமென்க என்று விரித்துரைக்கும் அடியார்க்கு நல்லார். அத்தண்ணுமைக் கருவிகள் யாவை என்பதைப் பட்டியலிடுகிறார்: பேரிகை, படகம், இடக்கை, உடுக்கை, மத்தளம், சல்லிகை, கரடிகை, திமிலை, குடமுழா, தக்கை, கணப்பறை, தமருகம், தண்ணுமை, தடாரி, அந்தரி, முழவு, சந்திரவளையம், மொந்தை, முரசு, கண்விடுதூம்பு, நிசாளம், துடுமை, சிறுபறை, அடக்கம், தகுணிச்சம், விரலேறு, பாகம், உபாங்கம், நாழிகைப்பறை, துடி, பெரும்பறையெனத் தோலாற் செய்யப்பட்ட கருவிகள் என்கிறார் அடியார்க்கு நல்லார்[2].*
*குடமுழாவுக்கு இன்னொரு பெயர் குளிர். இத்தாழ்குரல் விளக்கம்தான் அந்த குளிருக்குப் பொருளாகவும் நாம் இங்கு கருதத்தக்கது. கி.பி., 4 அல்லது 6 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த காரைக்கால் அம்மையார்தான் முதன் முதலாக குடமுழா என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார்[4]. திருவாலங்காட்டு மூத்தத் திருப்பதிகத்தில்:*

*"மத்தளங் கரடிகை வன்கை மென்றோல்*
*தமருகங் குடமுழா மொந்தை வாசித்*
*தத்தனை விரவினோ டாடுமெங்கள்*
*அப்பனிடந்திரு ஆலங்காடே"*

*என்று குடமுழாவின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*"படுகிளி கடியுங் கொடிச்சிகைக் குளிரே*
*இசையின் இசையா இன்பாணித்தே" (குறுந். 291: 2-3)*

*தினைக்காட்டில் குருவிகளை விரட்ட குளிர் எனும் குடமுழாக் கருவி பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அது குருவிகளுக்கு கடிந்த ஓசையாக எழுப்பினும், இனிய இசையை வழங்கிய கருவியானதாக இருந்திருக்கிறது என்று குறுந்தொகை குறிப்பிட்டுள்ளது.*
*திருக்கைலாய ஞான உலாவில் "குடமுழவம் கொக்கரை வீணை குழல்யாழ்" என்றும் குடமுழா குறிப்பிடப்பட்டுள்ளது.*

*“குரா மலரோடு அரா மதியம் சடை மேல் கொண்டார்*
*குடமுழ நந்தீசனை வாசகனாக் கொண்டார்” (திரு. பா-11)*

*என தேவாரத்தில் நந்தியம் பெருமாள் குரா மர மலர்களோடு, அரவத்தை சடை மேல் கொண்ட இறைவனின் நடனத்துக்கு ஏற்றவாறு குடமுழா இசைத்ததாகக் குறிப்பு உள்ளது.*

*பண்புகொள் யாக்கையின் வெண்பலி அரங்கத்து*
*மண்கணை முழவம் ஆக ஆங்குஓர்*
*கருந்தலை வாங்கிக் கையகத்து ஏந்தி (மணி. 120)*

*'தரை மண்ணை முழவாக அடித்துக் கொண்டு வந்த' என்ற பொருளை உணர்த்தும் இவ்வரி, குடமுழாவை மண்கணை முழவம் என்று எடுத்தியம்புகிறது.*

*குயிலுவர் ஒலியோடு குடமுழ வதிர்வொடு*
*மயிலின மகளிர்தம் அவிநய மடநடை (சூளா. 942: 1-2)*

*குடமுழவு பெண்கள் ஆடும் போது குயிலுவக் கருவிகளான தாளக் கருவியிசை ஒலிகளுடன் ஆடுகின்றனர் என்கிறது சூளாமணி.*

*எல்வளை மகளிர் ஏந்திய விளக்கம்*
*பல்லாண் டேத்தப் பரந்தன வொருசார்*
*மண்கணை முழவும் வணர்கோட் டியாழும்*
*பண்கனி பாடலும் பரந்தன வொருசார் (சிலப். 3. 28-55)*

*ஒளிவீசும் கையணிகள் அணிந்த பணிப்பெண்கள் ஏந்தி வந்த மங்கல விளக்கும், வாழ்த்து ஒலிகளும் ஒருபுறமும் நிறைந்திருக்க, சிறப்புடைய மத்தளமும் (குடமுழா) வளைந்த உருவம் கொண்ட யாழும் எழுப்பும் பண்ணிசை நிறைந்திருந்தாக சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது.*

***ஆய்வுக்கட்டுரையின் நோக்கம்:***

*தமிழ் இசையின் பெருமையை இளம் தலைமுறையினருக்கு எடுத்துச் சொல்லும் வகையில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், தொடர்பியல் துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துக்கு முதல் கட்டுரையாசிரியரை முதன்மை ஆய்வாளராகக் கொண்டு பாடல் இசை ஒருங்கிணைப்புப் பணியை மேற்கொள்ள திட்டம் அளித்தது. இத்திட்டத்தின் நிறைவில் அலைபேசிச் செயலியில் இசையை பாடலுடன் வெளியிட வேண்டும். இத்திட்டத்தில் மொத்தம் 12 பாடல்களில் 3 பாடல்களில் குடமுழா இசை சேர்க்கப்பட்டுள்ளது. இது அலைபேசிச் செயலி வழியாக அனைவரும் தற்போது கேட்டுப் பயன்பெற முடியும். .*

*அடியார்க்கு நல்லார், சிலப்பதிகார காலக் கருவிகளில் குடமுழா பற்றிக் குறிப்பிடுவதாலும், பக்தி இலக்கிய காலத்திலும் குடமுழா சிறந்தோங்கியிருந்திருக்கிறது. பக்தி இலக்கிய காலத்துக்குப் பிந்தைய காலத்தில் தமிழகத்தில் பொதுப் பயன்பாட்டிலிருந்து குடமுழா அருகத் தொடங்கி அதன் பின் சில நூற்றாண்டுகளில் மறைந்திருக்கலாம். ஆக, இசை நிகழ்ச்சிகள் மற்றும் பொழுதுபோக்கு நிகழ்வுகளில் குடமுழா இடம்பெறாமல் போய்விட்டது. அவ்வாறு பொதுப் பயன்பாட்டிலும், சிலப்பதிகாரத் தமிழ்ப் பாடல்களுக்கும் அருகிவிட்ட குடமுழாவின் இசையை மீண்டும் கேட்கும் வண்ணம், சிலப்பதிகாரப்பாடல்களுக்கு இசை அமைக்கும் திட்ட முயற்சி குறித்து இக்கட்டுரை பதிவு செய்கிறது.*

***ஆய்வு வினாக்கள்:***

1. *குடமுழா இன்னிசை வழங்கும் கருவியா? கடிய ஓசை வழங்கும் கருவியா?*
2. *அரங்கேற்று காதையில் கருவிகளுடன் சேர்ந்திசைத்த குடமுழாவைத் தற்போது, சிலப்பதிகாரப் பாடல்களுக்குப் பயன்படுத்த முடியுமா?*
3. *குடமுழா தமிழகத்தில் பொதுப் பயன்பாட்டில் மறைந்ததற்கான காரணங்கள் யாவை?*

***ஆய்வு நெறிமுறைகள்:***

*குடமுழாவைப் பயன்படுத்துவதற்கு உரிய பாடல்களைத் தேர்வு செய்தல், குடமுழாவுடன் இணைந்து வாசிக்க உரிய கருவிகளைத் தேர்வு செய்தல், பாடல்களுக்கு உரிய சிலப்பதிகார காலத்தைச் சேரந்த பண்களைத் தேர்வு செய்தல். பின்னர், குடமுழாவை பொதுப் பயன்பாட்டுக்கு வாசிப்பவரைக் கண்டறிந்து, இசைப் பதிவு செய்து சிலப்பதிகாரப் பாடலில் சேர்ப்பது. இதற்கான ஆய்வுக்காலம் 2015 முதல் 2022 வரை.*

*தமிழ்நாட்டிலிருந்து இக்கருவியை இசைக்கக்கூடிய தேர்ச்சி பெற்ற கருவியாளர் 2015 ஆம் ஆண்டில் யாரும் இலர். பண்டையத் தமிழ்நாட்டில் முழங்கி வந்த குடமுழா, கேரளாவில் தற்போது மிழவு எனும் பெயரில் வழக்கத்திலிருந்து வருகிறது. கேரள அரசின் கலாசாரத் துறையின் இணையதளத்தில் மிழவு பற்றி குறிப்பிடும் போது, சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இசைக்கருவி என்று குறிப்பிடுவதிலிருந்து[5] இது பண்டையத் தமிழ் இசைக் கருவி என்பது ஐயமின்றி விளங்குகிறது. அத்துடன் மிழவு, தமிழகத்தின் மறைந்துவிட்ட ஒரு முகக் குடமுழாவின், அதே பண்பு நலன்களைக் கொண்டுள்ளது. ஆகவே மறைந்துவிட்ட தமிழ் இசையை, தமிழ் கூறும் நல்லுலகம் மிழவு இசைக்கருவி வாயிலாக அறிந்து கொள்ள முடியும். இதற்கு தேர்ச்சி பெற்ற கருவியாளர் உதவியுடன் சிலம்புப் பாடல்களுக்கு இசையமைக்கும் பணி மேற்கொள்வது என முடிவானது. சாக்கையர் கூத்தில் மண்கணை முழவு சேர்ந்திசைக்கப்படுவது தமிழர் வழக்கம். அவ்வகையில் மட்பாண்டத்தில் செய்த, திரட்சியான தோற்றமுடைய முழவான மண்கணை முழவு இப்போது, கேரள கூடியாட்டத்தில் சேர்ந்திசைக்கும் உலோகக் கருவியாக மிழவு வழக்கத்தில் உள்ளது என்பது கவனிக்கத்தக்கது.*

இந்த ஆய்வில் திருவாரூரில் ஐம்முகக் குடமுழாவைப் பயன்படுத்தி வந்த திரு. செல்வராசு மற்றும் அவர் மறைவுக்குப் பின்னர் தற்போது அக்கருவியைப் பயன்படுத்தி வரும் அவரது மகள் திருமதி. சுமதி ஆகியோருடைய நேர்காணல்கள் குடமுழா தமிழக வழக்கத்திலிருந்து மறைந்ததற்கான காரணங்களை அறிவதற்காக இடம்பெறுகின்றன.

**பாடல் தெரிவு மற்றும் பண் தேர்வு:**

குடமுழாவைப் பயன்படுத்த சிலப்பதிகாரத்திலிருந்து மூன்று பாடல்கள் தேர்வு செய்யப்பட்டன.

1. **மல்லன் மூதூர் மகிழ்விழாக் காண்போன்**

மாதவியின் பதினொரு வகை ஆடல்களைக் குறிப்பிடும் இப்பாடலில் மத்தளம், குழல், திமிலா, பறை, நகரா, கிடுகிட்டி, சந்திரப்பிறை, சூரியப் பிறை, இடக்கை, தக்கை ஆகிய கருவிகளுடன் குடமுழா கருவி இசைக்க முடிவானது. புகார் காண்டத்தில் கடலாடுகாதையில் இடம்பெற்றுள்ள இப்பாடலைப் பாடுவதற்கு சீர்காழி சிவசிதம்பரம் தேர்வு செய்யப்பட்டார். முல்லையாழ் – செம்பாலை இன்றைய அரிகாம்போதி பண் தேர்வானது.

2. **திங்கள் மாலை வெண்குடையான்**

காவேரி ஆற்றை கோவலன் வாழ்த்திப் பாடும் இப்பாடலில், மத்தளம், நகரா, பறை, திமிலை, தமருகம், துடும்பு, குழல் ஆகிய கருவிகளுடன் குடமுழா கருவி இசைக்க முடிவானது. புகார் காண்டத்தில் கானல் வரியில் இடம்பெற்றுள்ள இப்பாடலைப் பாட கலைமகன் தேர்வானார். முல்லைத் தீம்பாணி இன்றைய மோகனம் பண் தேர்வானது.

3. **இன்புறு தம்கணவர் இடர்எரி அகம்மூழ்க**

கணவரை இழந்த கண்ணகி கதறுவதாக அமைந்துள்ள இப்பாடலுக்கு இடக்கை, குழல், உடுக்கை, நகரா, சதங்கை, பறை, திமிலை, முரசு, சங்கு, சின்னம், கொக்கரை ஆகிய கருவிகளுடன் குடமுழா இசைக்கத் தேர்வானது. மதுரைக் காண்டத்தில் துன்பமாலையில் இடம்பெற்றுள்ள இப்பாடலை அகிலா மற்றும் முத்துக் கந்தசாமி தேசிகர் பாடுவதற்கு தேர்வு செய்யப்பட்டனர். நெய்தல் பாணி – இன்றைய இந்தளம் பண் தேர்வானது.

**நேர்காணல் முடிபுகள்:**

குடமுழாவுக்குப் பிந்தைய வளர்ச்சி நிலை அடைந்த கருவிதான் ஐம்முக முழவக்கருவி. தமிழகத்தில் குடமுழா கைவிடப்பட்டதற்கான காரணங்கள் அறியும் முயற்சியில், ஐம்முக முழவக்கருவியை இயக்கும் பாரசைவ முட்டுக்காரர் பரம்பரையின் இருதலைமுறை கருவியாளர்களிடம் நேர்காணல்கள் நடத்தப்பட்டது. இந்நேர்காணல்கள் 2016 ஆம் ஆண்டும் 2022 ஆம் ஆண்டும் நடத்தப்பட்டன.

*14.05.2016 இல் திருவாரூர் தியாகேசர் கோயிலில் ஐம்முக முழவுக் கருவியான குடமுழாவை இசைக்கும் செல்வராசு நேர்காணல் முடிபுகள்[6]:*

- *குடும்ப வாரிசுகள் இக்கருவியை இசைக்கின்றனர். எனக்கு முன் எனது தந்தை வாசித்தார். எனக்குப் பின் எனது மகள் வாசிக்க இருக்கிறார். சோழ மன்னர்கள் காலத்தில், குடமுழா வாசிப்பவர்களுக்கான நல்ல ஆதரவு இருந்தது.*
- *ஐம்முக முழவுக் கருவி இசைப்பவர்கள் பாரசைவ முட்டுக்காரர் என்று அழைக்கப்படுகின்றனர். அவர்கள் தவிர வேறுயாரும் ஐம்முக குடமுழவு இசைக்கும் பயிற்சி அனுபவம் பெரும்பாலும் இல்லை. ஒரு முக முழவு கொண்டு தமிழகத்தில் பொது நிகழ்ச்சிகளில் இசைப்பவர்களும் இல்லை.*
- *சாயரட்சை வழிபாடு பிற சிறப்பு வழிபாடுகள் தவிர்த்து பிற வேண்டிய நேரங்களில் ஐம்முக முழவுக் கருவியினை இசைக்க ஆகம விதிகள் ஒத்துக்கொள்ளது. ஆக பிறருக்கான பயிற்சி வாய்ப்புக்குரிய கருவியல்ல அது. மேலும், யாரும் ஆர்வத்துடன் குடமுழாவைத் தொழிலாகக் கொள்ள பெரும்பாலானோர் முன்வருவதும் இல்லை.*
- *பஞ்சமுகக் கருவி மான் தோலால் ஆனது. சிவபெருமானின் நிருத்தங்களுக்கு மட்டுமே குடமுழா இசைக்கப்படுகிறது. திருத்துறைப்பூண்டியிலும் நானே இசைக்கிறேன்.*

*ஆக, தமிழகத்திலிருக்கும் ஒரே இசைக்கருவியான திருவாரூர் கோயில் ஐம்முக முழவக் கருவியை நாம் சிலப்பதிகாரப் பாடலுக்கு இசையைச் சேர்க்க முடியாது என்று அவர் தெரிவித்தார்.*

*20.10.2022 இல் மேற்கொள்ளப்பட்ட திரு. செல்வராசு மகளும் ஐம்முக முழவக் கருவியாளருமான திருமதி. சுமதியின் நேர்காணல்[7] முடிபுகள். இவர் 2018 ஆம் ஆண்டிலிருந்து குடமுழாக் கருவியை இசைத்து வருகிறார். குடமுழாக் கருவி அறிமுகம் செய்த பல நூற்றாண்டு வரலாற்றில், இக்கருவியை இசைக்கும் முதல் பெண்மணி இவர்.*

- *கோயில் பணியை விட்டுவிடக் கூடாது என்பதற்காக நான் இப்பணியை மேற்கொண்டுள்ளேன். தியாகேசரின் அஜபா நடனத்துக்கு உடன் வரும் சுத்த மத்தளமும் குடமுழா வாசிப்பவரால் வாசிக்கப்படுகிறது.*
- *ஒவ்வொருநாளும் மேற்கொள்ள வேண்டிய கோயில் பணிகளுக்காக சுக துக்க நிகழ்ச்சிகளில் பங்கேற்க முடியாத நிலை உள்ளது.*
- *முன்பு ஒரு தெரு முழுக்க குடமுழா வாசிக்கும் முட்டுக்காரர்கள் இருந்துள்ளனர். ஆக, அவர்கள் செல்வாக்குடன் திகழ்ந்திருக்கிறார்கள். இப்போது அந்நிலை இல்லை.*
- *இக்கருவியைக் கையாள்வது கடினமானதால் இக்கருவி பலரால் கைவிடப்பட்டிருக்கலாம். சொற்கட்டுகள் மற்றும் தாளக்கட்டுகள் முட்டுக்காரர் குடும்பத்துக்குள் உள்ளது.*

- குடமுழா வாசிப்பவர்களின் பொருளாதார வாய்ப்பு நிலை பெரிதாக இல்லை. சுக துக்கத்துக்குச் செல்ல இயலாத நிலையிலும் அவர்கள் வேறு பிற பொருளாதார வாய்ப்புகளை உருவாக்க இயலாத நிலையிலும், இக்கருவியை தொழில் வாய்ப்பாகக் கொள்ள முடியாத நிலை உள்ளது. இசைக்கருவியாளராவதை விரும்பாத மனப் போக்கு ஆகியன இக்கருவி பரவலாகாததற்குக் காரணம்.

இருவரது நேர்காணல்களிலிருந்து முடிபாக, இவர்களுடைய குடும்பத்தினர் கோயிலுக்காக மட்டுமே கருவியை இசைக்கின்றனர். குறிப்பாக, இத்திறன் குடும்பப் பாரம்பரியத்துடன் தொடர்வதாக அமைந்துள்ளது. ஒருமுக முழவுக்கருவி வழக்கத்தில் இல்லை. குடமுழவத்தின் மீதான வாசிக்கும் ஆர்வம் பொது இசைக்கலைஞர்களிடம் குறைவாக இருக்கிறது என்று இருவருமே ஒப்புக் கொண்ட கருத்துக்கள். கையாள்வதற்கான கடினமான கருவி உள்ளிட்ட கருத்துகள் யாவுமே, குடமுழா தமிழக வழக்கத்திலிருந்து மறைந்ததற்கான சில காரணங்களாக அவர்கள் முன் வைக்கின்றனர். கையாள்வதற்கு கடினம் என்பது இப்போது உலோகக் கருவியாக அதிக கனம் கொண்டது என்பது மட்டுமல்லாமல், முன்பு அது மட்பாண்டமாக இருந்த போதிலும் அதன் நிலை அதீத கவனமுடன் கையாள வேண்டியதாக இருந்திருக்கலாம். சிறிய மண்குடமெனில் பொதுமேடைகளில் அதன் நாதத்தின் அளவும், அது பெரிய மண்பாண்டமாக இருந்தால் கையாள்வதில் உள்ள சிரமங்களும் இங்கே நோக்கத்தக்கது.

**குடமுழா இசைச் செயல்முறை முடிபுகள்:**

பாடலுக்கான இசைக்கருவியாளராக கேரளாவைச் சேர்ந்த ரத்தீஸ் பாசு தேர்வுசெய்யப்பட்டார். கேரளாவில் உள்ள திரூரில் உள்ள ஒலிப்பதிவு மையத்தில் அவர் 3 பாடல்களுக்கும் குடமுழா (மிழவு) வாசித்தார். இந்த இசை வடிவத்தை மேற்கோள் பகுதியில் வழங்கப்பட்டுள்ள அலைபேசிச் செயலியின் இணைப்பின் வழியேக் கேட்டுக் கொள்ள முடியும்.

மல்லன் மூதூர் மகிழ்விழாக் காண்போன் எனும் பாடலின்
அவரவர் அணியுடன் அவரவர் கொள்கையின்
நிலையும் படிதமும் நீங்கா மரபின்

எனும் வரிகளுக்கு குடமுழா பிற கருவிகளுடன் இணைந்து தன் இசையின் தனித்துவத்தைச் சேர்த்திருக்கிறது.

திங்கள் மாலை வெண்குடையான் எனத்தொடங்கும் பாடலில்
மழவர் ஓதை வளவன் தன்
வளனே வாழி காவேரி
என்ற வரிகளுக்கு குடமுழா இசை சேர்த்து இன்பம் பயக்கிறது[8].

இன்புறு தம்கணவர் இடர்எரி அகம் மூழ்க

*எனத்தொடங்கும் பாடலில் முழுவதுமாக குடமுழா ஏனைய தோற்கருவிளுடன் நின்றிசைத்திருக்கிறது[6].*

*வழக்கொழிந்த குடமுழாவை சிலப்பதிகாரப்பாடலுக்குப் பயன்படுத்திய முதல் முயற்சி இது. குடமுழாவின் தாளம் மற்றும் இசை எப்படி இருக்கும் என்று அறிய விழைவோருக்கான ஒரு பதிலாகவும் இது அமைந்திருக்கிறது என்பதில் ஐயமில்லை.*

*குடமுழா கடிய ஓசை கொண்டதா அல்லது இன்னிசை வழங்குவதா என்ற வினாவுக்கு, இன்னிசையை வழங்குகிறது என்பது இப்பாடல்களின் இசையிலிருந்து அறியலாம். அத்துடன், இப்பாடல்களில் தனித்துவத்துடன் குடமுழா வழங்கியிருக்கும் இசை அது ஆடல் இன்னிசைக் கருவியாகக் கொள்ளத்தக்கதாகவும் அரங்கக் கருவி என்பதும் மீண்டும் புலனாகிறது. தமிழர் வழக்கத்திலிருந்த மங்கல நிகழ்வுகளுக்கான தாளக் கருவியாகவும் குடமுழாவைப் பயன்படுத்திக் கொள்ள முடியும் என்பதை இப்பாடல்களின் இசைப்பதிவுகள் நிரூபிக்கின்றன.*

*குடமுழாக் கருவியைத் தமிழ்ச்சமுதாயம் மீட்டெடுக்க வேண்டுமானால் அது, பொது அரங்குகளில் ஒலிக்க வேண்டும். இன்று தமிழ் இசை மன்றங்களில் இதை மீண்டும் கொண்டு வர வேண்டும் என்ற எண்ணமும் விருப்பமும் இருக்க வேண்டும். தமிழ் இசைப் பயிற்சி மையங்களில் தமிழ் இசைக்கருவிகளுக்கான பயிற்சிகள் வர வேண்டும். வழக்கொழிந்துவிட்ட இடக்கை, குடமுழா மற்றும் யாழ் கருவிகள் மீண்டும் அதன் பழைமையின் வடிவத்திலேயே மீட்டெடுக்கப்பட வேண்டும், அவை இன்றைய நிலையிலும் புதுமையானவை என்பதை நாம் அதன் வழியே அறிந்து கொள்ளலாம்.*

*குடமுழாவை சிலப்பதிகாரப்பாடல்களுக்கு இசையில் சேர்த்து ஒலிவடிவில் அலைபேசிச் செயலியில் இடம்பெறச் செய்திருப்பது இதுவே முதல் முயற்சி. அலைபேசிச்செயலியைத் தரவிறக்கம் செய்து ஆன்டிராய்டு மொபைலில் நிறுவிக் கொண்டு இசையை கேட்டுப் பயன்பெறலாம்[6].*

***முடிவுரை***

*சீவக சிந்தாமணியில் 'குயின் முழவம்' என்றும், சூளாமணியில் 'ஆடல் முழவமும்' என்று குறிப்பிடப்படும் குடமுழவம், சிலப்பதிகாரத்துக்கு உரை எழுதிய அடியார்க்கு நல்லார் விரித்துச் சொன்ன குயிலுவக் கருவிகளுடன் குடமுழா சிறப்பாக இணைந்து இசை வழங்கியிருக்கிறது.*

*"மாறுகொண்ட கோடியர் மணிமுழா முழங்கலிற்*
*றாறுகொண்ட தோகைமஞ்ஞை யாடல்கண்டு கண்மகிழ்ந்து" (சூளா; 798)*

*என்ற சூளாமணியின் வரிகளில், அழகிய முழவு கணீர் என்று இனிமையாக முழங்கியதைக் கேட்டு அடர்ந்த தோகையை உடைய மயில்கள் களித்தாடின என்பதிலிருந்து, குடமுழாவின் கணீர் ஒலி புலனாகிறது.*

இந்த ஆய்வின் செயல்முறை இசையில் இந்த ஒலியின் பண்பு நலன்கள் விளங்கப் பெற்றன. மூன்று பாடல்களும் தமிழ் கூறும் நல்லுலகுக்கு குடமுழாவின் இன்னிசை வழங்கும் என்பதை மீண்டும் நிரூபித்துள்ளன. குடமுழாவின் பழைமையை அறிந்து கொள்வது, தமிழரின் மரபுகளையும் இசை சார்ந்த வாழ்க்கை முறையையும் மீட்டெடுத்துக் கொள்ள உதவுவதாக அமையும். குடமுழாக் கலைஞர்களை உருவாக்கும் வாய்ப்புகள் தமிழகத்தில் இல்லாத போது, தமிழ் மண்ணின் ஒருங்கிணைந்த பகுதியாக முன்பு இருந்த கேரளாவின் மிழவு இசையிலிருந்தும், தமிழகத்திலுள்ள கைதேர்ந்த இசைக்கலைஞர்களிடமிருந்தும் குடமுழாவை மீட்டெடுத்துக் கொள்ள முடியும். மீண்டும் தமிழகத்தில் குடமுழா அரங்கேற்றம் நடைபெற வேண்டும். சிலப்பதிகார இசைக் காலம் தமிழகத்தில் மீண்டும் மலர வேண்டும்.

***References***


1. பெருமாள், ஏ. என்., உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம். சென்னை, *1984.*
2. அடியார்க்கு நல்லார், இளங்கோவடிகளருளிச்செய்த சிலப்பதிகார மூலமும் அரும்பதவுரையும் அடியார்க்கு நல்லாருரையும் *(11*வது பதிப்பு*)*. டாக்டர் உ.வே.சா. பதிப்பு, *2008.*
3. *Subramanian, S. V., and G. Rajendran. Heritage of the Tamils Temple Arts. International Institute of Tamil Studies, 1985.*
4. பாலசுப்ரமணியம் குடவாயில். குடமுழா (பஞ்சமுக வாத்தியம்). அன்னம் - அகரம் பதிப்பகம், *1997.*
5. *Kerala Culture. "Mizhavu - a Percussion Instrument." Kerala Culture, Department of Cultural Affairs, Government of Kerala, 2021, http://www.keralaculture.org/mizhavu/138.*
6. செல்வராசு மற்றும் சு நாகரத்தினம். "குடமுழாக் கருவியின் இன்றைய நிலை." *14 May 2016.*
7. சுமதி மற்றும் சு. நாகரத்தினம். "குடமுழாக் கருவியின் இன்றைய நிலை." *20 Oct. 2022.*
8. சிலம்பிசை அலைபேசிச் செயலி, செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், பதிப்பு *1.1*, அலைபேசிச் செயலி, *https://play.google.com/store/apps/details?id=com.softcraft.silambuisai, 2021 (https://drive.google.com/file/d/1YezohIUTTGm6jAiJohc1NmJzIhZyW0aN/view?usp=share_link).*